**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**O.S.No: 291/2023** **தேதி: 04.02.2026**

**வா.சா. 1 – ராமசாமி என்ற விஜயராம்**

**<u>11 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

வழக்கு தாக்கல் செய்ய வழக்கறிஞருக்கு விபரம் நான் தான் சொன்னேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு மற்ற வாதிகள் எதுவும் பவர் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. வாய்மொழியாக சாட்சியம் அளிக்க சொல்லியுள்ளார்கள். மேற்சொன்ன விபரத்தை நான் எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் அதை பற்றி தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலம் எனது தரப்பு சாட்சியாக தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து எனது தந்தை வழியில் வந்த பூர்விக சொத்துக்கள் என்று தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தந்தை வழியில் வரும் சொத்துக்கள்தான் பூர்விக சொத்துக்கள் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு தந்தை வழியில் என்ன என்ன சொத்துக்கள் வந்தது என்றால் நிறைய சொத்துக்கள் உள்ளது. அதில் ஒரு சொத்து தாவா வழக்கில் கண்ட சர்வே நம்பர் 209/1 சொத்து ஆகும். எனது தகப்பனாருக்கு தாவா சொத்து எந்த ஆவணத்தின் அடிப்படையில் கிடைக்கப்பெற்றது என்றால் 1958 ன் பாகப்படி எனது தந்தைக்கு தாவா சொத்து கிடைக்கப்பெற்றது. 1958 ன் பாகத்தில் எனது தகப்பனார் வழி தாத்தா சாது.த.ராமசாமி நாயக்கர் 1 வது பார்ட்டியாகவும், எனது பெரியப்பா ஜெயராமன் 2 வது பார்ட்டியாகவும், எனது தகப்பனார் சுப்பாராஜ் 3 வது பார்ட்டியாகவும், எனது சிறிய தகப்பனார்கள் தினகரன், வரதராஜன் மற்றும் கண்ணன் ஆகியோர்கள் 4, 5, 6 பார்ட்டியாகவும் இருந்தார்கள். அந்த பாகத்தில் ஒவ்வொருவருக்கும் ஒரு, ஒரு செடியூல் சொத்துக்கள் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது தாத்தாவிற்கு ஏ செடியூல், ஜெயராமன் என்பவருக்கு பி செடியூல், எனது

தகப்பனாருக்கு சி செடியூல், தினகரன் என்பவருக்கு டி செடியூல், வரதராஜன் என்பவருக்கு இ செடியூல், கண்ணன் என்பவருக்கு எப் செடியூல் 1958 பாகத்தில் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாகத்தில் விவசாய நிலங்களை பொறுத்து எனது தாத்தா ராமசாமி நாயக்கர் அவரது குமாரர்களுக்கு பி முதல் எப் செடியூலில் உள்ள விவசாய நிலங்களை பிரித்துக் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். ஏ செடியூலில் கண்ட தொழில், வியாபாரம் ஆகியவற்றை எனது தாத்தா அவர் கைவசம் வைத்திருந்தார் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் மேற்படி பாகத்தில் சி செடியூலில் எத்தனையாவது லக்க சொத்து என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து மேற்படி பாகத்தில் தான் வந்தது வேறு வழியில் வந்ததா என்றால் அது பற்றி தெரியாது. எனது தந்தை எந்த வருடம் இறந்தார் என்றால் 14.04.1986 ல் இறந்தார். 1958 ல் பாகம் நடந்த கால கட்டத்தில் எனது தாத்தா, பெரியப்பா ஜெயராமன், எனது தகப்பனார், தினகரன் ஆகியோர்கள் பாகதஸ்தர்களாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்றும், வரதராஜன், கண்ணன் ஆகியோர்கள் மைனராக இருந்து கார்டியன் ஸ்தானத்தில் கையொப்பம் செய்து பாகம் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஜெயவிலாஸ் என்ற விலாசத்தில் எனது பெரியப்பா, அப்பா, எனது சித்தப்பா ஆகியோர்கள் தொழில்களை தொடர்ந்து நடத்தி வந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி தொழில் மூலம் அருப்புக்கோட்டையில் நிறைய நூற்பாலைகள் நிறுவப்பட்டது என்றால் சரிதான். அதன் பெயர்கள் எனக்கு தெரியாது.

( பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.